Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

13

# சீதக்காதி நொண்டி நாடகம்

**முனைவர் செ.ஆமினா பானு,**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை(சுயநிதிப்பிரிவு),**
**சதக்கத்துல்லா அப்பா கல்லூரி, ரஹ்மத் நகர், திருநெல்வேலி-11.**
**மின்னஞ்சல் : ameenaaji@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் நாடக வரலாற்றைப் பொறுத்தவரை பதினாறு, பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகள் குறிப்பிடத்தக்க காலக்கட்டங்களாகும். பதினாறு, பதினேழாம் நூற்றாண்டிலிருந்துதான நாடக இலக்கியங்கள் எழுத்து வடிவில் கிடைத்துள்ளன. மேலும் சோழர் காலத்தில் அரசர்கள் ஆதரவில் அரண்மனைகளிலும், கோயில்களிலும் அடைந்து கிடந்த நாடகக் கலை, மக்கள் மன்றங்களைத் தேடிவரத் தொடங்கியது. தெலுங்கு மற்றும் மராட்டிய அரசர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த இந்தக் காலக்கட்டத்தில்தான், நாட்டுப்புற நிகழ்த்து கலைகளான பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம், குளுவ நாடகம், மகுட நாடகம், கீர்த்தனை போன்ற நாடக வகைகள் வளர்ச்சி பெற்றன.

**கடவுச்சொற்கள்**

சிற்றிலக்கியங்கள் – நொண்டி நாடகம் – நொண்டி நாடகத்தின் நோக்கம் - சீதக்காதி – முஹம்மது ஹூசைன் நயினார் – சீதக்காதி நொண்டி நாடகம்

**முன்னுரை**

தமிழ்மொழியிலுள்ள இலக்கியங்களைப் பேரிலக்கியம் , சிற்றிலக்கியம் என்று பொதுவாக வகைப்படுத்தும் மரபு உள்ளது. இதில் சிற்றிலக்கியங்கள் என்பதனுள் 96 வகையான இலக்கியங்கள் காணப்படுகின்றன. இந்த 96 வகையான இலக்கிய வடிவங்களிலும் பல்வேறு சமயங்கள் அளப்பரிய பங்களிப்பைச் செய்துள்ளன. குறிப்பாக இசுலாமிய தமிழ்ப் புலவர்கள் தமிழின் பல வகையான இலக்கிய வடிவங்களிலும் தங்கள் படைப்புகளை வெளிப்படுத்தியுள்ளதோடு புதிய இலக்கிய வடிவங்களையும் உருவாக்கியுள்ளனர். மேலும் கீர்த்தனம், கும்மி, சிந்து, தாலாட்டு, பள்ளு, அம்மானை, ஏசல், நொண்டி நாடகம் போன்ற இசை சார்ந்த இலக்கிய வடிவங்களையும் இவர்கள் கையாண்டுள்ளனர். இவ்விலக்கியங்களில் நொண்டி நாடகம் பற்றி ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**நொண்டி நாடகம் : அறிமுகம்**

அரண்மனைகளில், கோயில் மண்டபங்களில் புழங்கி வந்த காப்பிய இதிகாசப் புராணங்கள் அமானுஷ்யமான அதீத ஆற்றல் கொண்ட கதாநாயகர்களைக் கொண்டிருந்தது.

இத்தகைய வரலாற்றுப் பின்புலத்தைக் கொண்டுள்ள இலக்கியங்கள் 17,18-ஆம் நுற்றாண்டுகளில் தான் வெகுஜனங்களின் வாழ்வைத் தழுவி அவர்கள் ரசிக்கும்படியான பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம், கீர்த்தனை நாடகங்கள் போன்ற சிற்றிலக்கியங்கள் தோன்றியதாக அறியப்படுகிறது.

தொல்காப்பியம் நகைச்சுவை என்னும் மெய்ப்பாடு தோன்றுவதற்குரிய நிலைக்களன்களாக எள்ளல், இளமை, பேதமை, மடன் என்ற நால்வகையைக் குறிப்பிடுகிறது. இந்நகைச் சுவையை அடித்தளமாகக் கொண்டு எழுந்தவையே நொண்டி நாடகங்கள். நொண்டிச் சிந்து எனவும் நொண்டி நாடகம் எனவும் குறிக்கப்படும் இவ்விலக்கிய வகை தமிழ்மேடை நாடகத்துக்கு முன்னோடியாக அமைகின்றது. சைவம், வைணவம், இஸ்லாம், கிறித்துவம் போன்ற சமயங்கள் தொடர்பான நொண்டி நாடகங்கள் இருந்திருக்கின்றன.

தமிழிலக்கிய வரலாற்றில் இதுவரை சுமார் 44 நொண்டி நாடகங்கள் தோன்றியதாக அறியமுடிகிறது. இவற்றில் சுமார் 15 நொண்டி நாடகங்கள் மட்டுமே அச்சாகி வந்துள்ளன. பிற நொண்டி நாடகங்கள் சுவடி நிலையிலேயே இருந்து அழிந்த வண்ணம் இருக்கின்றன.

**நொண்டி நாடகம்: தோற்றப் பின்புலம்**

தொடக்க காலத்தில் பின்பற்றப்பட்ட போர் முறைகளில் குதிரைப்படையும் ஒன்று. மற்ற படைகளை விட குதிரைப்படைக்கே மதிப்பும் கௌரவமும் அதிகம். எனவே குதிரைப்படையை மிகுதியாக்க எதிரிகளிடமிருந்து குதிரைகளைத் திருடிக் கொள்வது வழக்கமாக இருந்தது. ஆங்கிலப் படைக் குதிரைகளைப் பிரெஞ்சுக்காரர்களும், பிரெஞ்சுப் படைக் குதிரைகளை ஆங்கிலேயர்களும் திருடினர். குதிரையைத் திருடத் தெற்கத்திக் கள்ளர்கள் பயன்படுத்தப்பட்டனர். இத்தயை கள்ளர்கள் கிழவர்களாகி ஊர் திரும்பிய பிறகு தங்கள் பேரன்மார்களுக்கும், பிறருக்கும் தாங்கள் குதிரை திருடப்போன சூழல்களையும், நிகழ்த்திய வீரச் செயல்களையும், பட்ட துன்பங்களையும் தண்டனையால் தாங்கள் கைகால் இழந்ததையும் கதையாக எடுத்துக் கூறி, பொழுது போக்குவது வழக்கம். இதை அடிப்படையாகக் கொண்டுதான் தமிழ்ச் சிற்றிலக்கிய வகையில் ஒன்றாக விளங்கும் நொண்டி நாடகம் தோன்றியிருக்க வேண்டும்.

பதினேழாம் நூற்றாண்டின் இடைக்காலத்திற்குப்பின் எழுந்த மதுரைவீரன் கதையின் தாக்கம், பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவின் மீது அயல்நாட்டாரால் ஏற்பட்ட போர் விளைவு, குதிரை களவாடுதல், காலச்சூழ்நிலை ஆகிய இவை அனைத்தும் நொண்டி நாடகம் என்னும் இலக்கிய வகை தோன்றுவதற்குக் காரணங்களாக இருந்துள்ளன.

**நொண்டி நாடகத்தின் நோக்கம்**

பள்ளு, குறவஞ்சி போலச் செல்வாக்குப் பெற்ற இலக்கிய வகையில் நொண்டி நாடகமும் ஒன்றாகும். மேடையில் தனியொரு மனிதனாகத் தோன்றும் கதைத் தலைவனின் தோற்றத்தை, அடிப்படையாகக் கொண்டு **'நொண்டி'** எனப் பெயர் பெற்றது. இதனை **'ஒற்றைக்கால் நாடகம்'** என்றும் அழைப்பர்.

ஒரு நடிகன் நொண்டியாக மக்கள் முன் தோன்றி, ஆடலும் பாடலும் மிகுந்த இவ்வகை

நாடகங்களை நடித்துக் காட்டியிருக்கிறான். நகைச்சுவை மிகுந்த நாடகமாக நொண்டி நாடகம் விளங்குகிறது. அக்காலச் சமுதாயத்தில் அதிகமாகக் காணப்பெற்ற பரத்தையர் உறவு, களவு போன்ற தீச்செயல்களை அரங்கத்தில் காட்டி மக்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்பதே நொண்டி நாடகத்தின் நோக்கமாகும். சிறப்பாக மக்களை மகிழ்வித்து, அறிவு புகட்ட வேண்டும் என்பதே இதன் குறிக்கோள். இசை கலந்த இலக்கிய நாடகம் ஆகும். வெண்பாவும், ஆசிரியப்பாவும் கலந்து சிந்து, ஆனந்தக்களிப்பு ஆகிய பாவினங்களால் இது ஆக்கப்பட்டிருக்கும்.

பெரும்பாலும் மக்களிடையே வழக்கில் இருந்து வந்த வழக்குச் சொற்களைக் கொண்டு நொண்டி நாடகம் ஆக்கப்பட்டிருக்கும். இது தமிழ் நாடகப் போக்கில் குறிப்பிடத்தக்க மாற்றமாகும், மக்களிடையே கருத்துப் பரவுதல் செய்வதற்கு அவர்களின் மொழியிலேயே நாடகம் ஆக்கப்பட்ட நிலையை இது உணர்த்துகிறது. மக்களின் மத்தியில் நாடகத்தின் கருத்தை எடுத்துச் சொல்லத்தக்க வகையில் நாடகம் எளிமைப்படுத்தப் பெற்றது. மக்களும் இதனை விரும்பி ஏற்றுக் கொண்டனர். இவ்வகை நாடகங்கள் வடிவமைப்பில் மக்களை வெகுவாக ஈர்த்தன. நடிப்புக் கூறுகளை ஆழமாக வெளிப்படுத்திக் காட்டுவதில் நொண்டி என்னும் தனிப்பாத்திரம், தனி நடிப்பு (Mona Acting) பாணியைத் தமிழுக்கு அறிமுகம் செய்திருக்கிறது எனலாம்.

பல நொண்டி நாடகங்கள் அக்காலத்தில் அரங்கேறின. அவற்றில் சிறப்பானவை திருச்செந்தூர் நொண்டி நாடகம், சீதக்காதி நொண்டி நாடகம், அவினாசி நொண்டி நாடகம், ஞான நொண்டி நாடகம், திருமலை நொண்டி நாடகம் முதலியனவாகும். நொண்டி நாடகத்தில் முதலில்தோன்றியதாகச் சீதக்காதி நொண்டி நாடகத்தைக் குறிப்பிடலாம்.

**சீதக்காதி நொண்டி நாடகம்**

நொண்டி நாடகங்கள் யாவும் பொதுவான கதைக் கருவைக் கொண்டவை. கதைத் தலைவன் தன்னுடைய பழைய வாழ்வை நினைவு கூர்வதாக நொண்டி நாடகக் கதை அமையும். எனினும் கதைத் தொடக்கத்தில் பெற்றோரிடம் அவன் வளர்வதாகவும், அவ்வாழ்வு பிடிக்காமல் வெளியேறுவதாகவும் நாடகக் கதை தொடங்கும். தனது மகிழ்ச்சியான வாழ்வை நோக்கி வீட்டை விட்டுச் சொல்லாமலேயே வெளியேறுவான் கதைத் தலைவன். சில நாட்களிலேயே பொருளனைத்தும் இழந்த நிலையில் திருடத் தொடங்குவான். திருடிக் கிடைத்த பொருளில் இன்பம் அடைய நினைப்பான். மதுவுக்கும், மாதுவுக்கும் அடிமை ஆவான். பொருளை இழந்து துன்பத்திற்கு ஆளாவான். உதவிக்கு யாரும் முன்வரக் காணாமல் துடிப்பான். பரத்தையரும் தன்னைத் துரத்தியடிக்க, மேலும் தீய வழியில் செல்லத் துணிவான்.

அவனுக்குச் சோதனை தொடரும். குதிரையொன்றைத் திருட முயலுகையில் கையும் களவுமாகக் காவலாளியிடம் பிடிபடுவான். அவனது கால்கள், கைகள் துண்டிக்கப்படும். இவ்வேளையில் அவன் கடவுளை நினைத்துக் கூக்குரலிட்டு அழுவான். கடவுள் கருணையால் இழந்த கால்களை மீளப் பெறுவான். கடைசி வரை கடவுளைப் போற்றி நல்லவனாகவே வாழ்வான். இதுவே நொண்டி நாடகத்துக்கான பொதுவான கதையமைப்பு. இந்நாடக

வடிவத்தினைக் கைக்கொள்ளும் நாடகாசிரியர்கள் தாங்கள் விரும்பும் நிகழ்வுகளை இக்கட்டமைப்புக்குள் மாற்றி அமைத்துக் கொண்டனர். இதன்படி சீதக்காதி நொண்டி நாடகம் இசுலாமிய நெறியை மையப்படுத்தி அமைந்துள்ளதை காணலாம்.

நொண்டி நாடக வகைகளில் இஸ்லாமிய சமயம் சார்ந்து கிடைக்கக்கூடிய சீதக்காதி நொண்டி நாடகம் அரிதானது. வகுதை என்னும் கீழக்கரையில் பதினேழாம் நூற்றாண்டில் வள்ளலாக விளங்கி வந்த சீதக்காதியைப் பாடுபொருளாகக் கொண்டது. சீதக்காதி நாடகம் பல வரலாற்றுச் செய்திகளைச் சொல்லுகிற நாடகமாக இருக்கிறது. சீதக்காதியுடன் தொடர்புடைய மகான் சதக்கத்துல்லா அப்பா, மறவர்சீமையை ஆண்ட கிழவன் சேதுபதி, தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர்கள், ஔரங்கச்சீப்பின் சேனைகள் எட்டு வருடங்கள்(1689-1697) செஞ்சிக் கோட்டையை முற்றுகையிட்டது போன்ற வரலாற்றுச் சம்பவங்களோடு சீதக்காதி நாடகம் தொடர்புடையதாக இருக்கிறது.

**சீதக்காதி நொண்டி நாடகத்தின் உள்ளடக்கம்**

நொண்டி நாடகங்களில் முதலில் தோன்றியது சீதக்காதி நொண்டி நாடகம். இதனை இயற்றியவர் முத்தாலங்குறிச்சி க.கந்தசாமிப் புலவர். இந்நூலில் காணப்படும் செய்தியான துல்பர்கானின் செஞ்சி முற்றுகை கி.பி. 1689 முதல் கி.பி.1697 முடிய எட்டாண்டுக்குட்பட்டதாகும். எனவே கி.பி. 1697 ஆம் ஆண்டிற்குப்பின் இந்நூல் தோன்றியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. மேலும் இந்நூலாசிரியர் திருச்செந்தூர் நொண்டி நாடகம், திருவனந்தபுரம் நொண்டி நாடகம் என்னும் இரு நொண்டி நாடகங்களையும் இயற்றியுள்ளார். சீதக்காதி நொண்டி நாடகத்தின் முதல் பதிப்பை 1939 இல் சென்னை பல்கலைக்கழகம் வெளியிட்டிருக்கிறது. பழனி ஆய்க்குடியை புர்வீகமாகக் கொண்ட முஹம்மது ஹுசைன் நயினார் 1953 இல் இரண்டாம் பதிப்பாக வெளியிட்டுள்ளார்.

**முஹம்மது ஹீசைன் நயினார் அறிமுகம்**

சீதக்காதி நொண்டி நாடகத்தைப் பதிப்பித்தவர் முப்பதுகளில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் அரபி, பார்ஸி, உருதுத் துறை தலைவராகப் பணியாற்றிய முஹம்மது ஹுசைன் நயினார் அவர்கள். பழனி ஆய்க்குடியை புர்வீகமாகக் கொண்டவர். உ.பி.அலிகார் பல்கலைக்கழகத்தில் அரபியும் சட்டமும் பயின்றுள்ளார். இஸ்லாமியத் துறையில் பணியாற்றினாலும் நயினார் அவர்களின் தமிழார்வத்தைக் கண்டு சென்னைப் பல்கலைக்கழக நிர்வாகம் சீறாப்புராணத்தையும் தமிழ் முஸ்லிம் புலவர்களைப் பற்றியும் ஆய்வு மேற்கொண்டு அவரது மேற்பார்வையில் கொண்டு வரவும், பணித்திருக்கிறது. 1953-இல் இரண்டாம் பதிப்பாக செய்தக்காதி நொண்டி நாடகத்துடன் சேர்த்து, செய்தக்காதிறு மரக்காயர் திருமண வாழ்த்து என்ற நூலையும் சரளமான நடையுடன், ஆழமான நூலாராய்ச்சியுடன் பதிப்பித்துள்ளார்.

**கடவுள் வணக்கம்**

நொண்டி நாடகங்கள் காப்பு எனப்படும் வாழ்த்துடன் தொடங்குகின்றன. எந்தச் சமயச்

சார்புடையதோ அந்தச் சமயக் கடவுளரின் வணக்கம் இடம் பெறுகிறது. அந்த வகையில் சீதக்காதி நொண்டி நாடகம் நபிநாயகம் வணக்கம், அபுபக்ரு வணக்கம், உமறு கத்தாப் வணக்கம், உதுமான் வணக்கம், அலி வணக்கம், ஹஸன் ஹூசைன் வணக்கம், முஹயத்தீன் வணக்கம் முதலிய காப்புப் பாடல்களைக் கொண்டுள்ளது. இதில் நபிநாயகம் என்பது இசுலாமியர்களின் இறைத்தூதராகவும் மற்ற நபர்கள் நபி நாயகத்தின் தோழர்களாகவும் அறியப்படுகிறது. இதனை,

**"நகுல னென்கிற சுகில னெண் கொடை**
**முகிலெ னுங்கரன் பெரிய தம்பி**
**நராதிபன் செய்தக் காதி தன்புகழே"(பாடல்:2)**

என்னும் பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன.

**வள்ளல் சீதக்காதி**

தென்தமிழக கடற்கரை நகரான வகுதை என்றழைக்கப்பட்ட கீழக்கரையில் ஏறத்தாழ 370 ஆண்டுகளுக்கு முன் பிறந்து, தன் ஈகைக் குணத்தாலும், கடல் வாணிப செல்வாக்காலும், பரங்கியர்களை எதிர்த்து நின்ற தீரத்தாலும், தாய்த் தமிழை போற்றிய புலவர்களை ஆதரித்ததாலும், சமய நல்லிணக்கத்தைக் காத்தும் வான்புகழ் எய்திட்ட சேது நாட்டுப் பெரியதம்பி மற்றும் விஜய இரகுநாத பெரியதம்பி என்ற மெய்க்கீர்த்திகள் கொண்டவர் தான் செத்தும் கொடை கொடுத்த வள்ளல் சீதக்காதி என்ற செய்கு அப்துல் காதிர் மரைக்காயர் அவர்கள். வள்ளல் சீதக்காதி மரைக்காயர் மறைந்து 320 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், கீழக்கரை வரலாற்றில் அவர் அழியாப்புகழ்நிலையை அடைந்து இப்புவி உள்ளவரை நினைவு கூறப்படுவார் என்றால் அது மிகை இல்லை.

போர்த்துகீசியர்களுக்குப் பின் கீழக்கரை பகுதிக்குள் நுழைந்த பரங்கியர்களான டச்சுக்களின் அடாவடியை எதிர்த்து, அவர்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய வள்ளல் சீதக்காதி, இராமநாதபுரம் அரசர் கிழவன் சேதுபதியுடன் நேசம் பாராட்டி நட்புக்கு இலக்கணமாக இருந்ததுடன், அரசருக்கு ஆலோசனை கூறும் அமைச்சராகவும் விளங்கினர். வள்ளலின் வேண்டுகோளின் படியே இறைத்தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு தாய்த்தமிழில் உமறுப்புலவரால் சீறாப்புராணம் என்ற காப்பியமாக இயற்றப்பட்டது.

**பெயர் பெறுதல்**

தலத்தின் பெயராலும், தலம், இறைவன் இரண்டின் பெயராலும், நொண்டிருக்கருளிய இறைவன் பெயராலும், நொண்டியைக் காத்த வள்ளல் பெயராலும், நொண்டி பெற்ற ஞானத்தின் பெயராலும் நொண்டி நாடகத்தின் பெயர் அமையும். அந்த வகையில் சீதக்காதி நொண்டி நாடகம் தன்னைக் காத்த வள்ளல் சீதக்காதியின் பெயரில் அமைகிறது.

**திருடர்கள் பற்றிய குறிப்பு**

குறவர்களின் வாழ்க்கை முறையினை அறிவதற்குக் குறவஞ்சி நூல்களும், பள்ளர்களின் வாழ்க்கை முறையினை அறிவதற்குப் பள்ளு நூல்களும் பயன்படுவதைப் போன்று கள்ளர்களின்

வாழ்க்கை முறையினை அறிய நொண்டி நாடகங்கள் பயன்படுகின்றன. இந்நாடகங்களில் இடம்பெறுகின்ற திருடர்களைக் குலத்தொழிலால் திருடர்களாக இருப்பவர் சூழ்நிலையால் திருடர்களாக ஆனவர் என இருவகையினராகப் பிரிக்கலாம். இவ்விரு வகையினருள் முதல்பிரிவைச் சேர்ந்தவர்களே நொண்டி நாடகங்களில் அதிகமாக இடம்பெறுகின்றன. இதனை,

**”வாசியைக் களவு களவுசெயவின்றமா**
**வாசையிருட்டுவந்து வாச்சுதென்றே**
**ஈசலைப் போலொடுங்கித் தனித்தோர்**
**இடத்தினிற் சென்று நான் படுத்தேனே” (பாடல்: 106)**

எனும் வரிகளினூடாக சீதக்காதி நொண்டி நாடகம் எடுத்துரைக்கின்றன.

**அமைப்பு**

இது நான்கு விருத்தப்பாக்களையும், கடவுள் வணக்கத்தோடு இருநூற்று முப்பத்திரண்டு பாடல்களையும் கொண்டது. இந்நாடகம் மட்டும் தன்னைக் காத்த வள்ளலின் பெயரால் அமைந்திருக்கிறது. நொண்டி வேசியிடம் பொருள்களை எல்லாம் கொடுத்துத் திருச்செந்தூர் நொண்டியைப் போல் வேசியின் ஆசையை நிறைவேற்றுவதற்காகக் குதிரை திருடச் செல்கிறான். ”பொன்னே மடமயிலே இதோபோரேன் சிறைகொடு வாரேன்” என்று கூறிச் சென்று, குதிரை திருடுகிற போது அகப்பட்டுக் கொண்டு அரசனால் கையும் காலும் வெட்டப்படுகிறான். சீதக்காதியின் உதவியால் மெக்காவிற்குச் சென்று இழந்த கை, கால்களை மீண்டும் பெறுகிறான்.

இந்நாடகத்தில் அராபி, பாரசீகம், இந்தி முதலிய பிறமொழிச் சொற்கள் காணப்படுகின்றன. எழுபத்தேழு பாரசீக, இந்திச் சொற்களும், ஐம்பத்து நான்கு அராபிப் பெயர்களும் காணப்படுகின்றன.

**முடிவுரை:**

நொண்டி நாடகங்கள் யாவும் பொதுவான கதைக் கருவைக் கொண்டவை. கதைத் தலைவன் தன்னுடைய பழைய வாழ்வை நினைவு கூர்வதாக நொண்டி நாடகக் கதை அமையும். இந்நாடக வடிவத்தினைக் கைக்கொள்ளும் நாடகாசிரியர்கள் தாங்கள் விரும்பும் நிகழ்வுகளை இக்கட்டமைப்புக்குள் மாற்றி அமைத்துக் கொண்டனர். இதன்படி சீதக்காதி நொண்டி நாடகம் இசுலாமிய நெறியை மையப்படுத்தி அமைந்துள்ளதை காணலாம்.

**பயன்பட்ட நூல்கள்**

1. முஹம்மது ஹூசைன் நயினார், செய்தக்காதி நொண்டி நாடகம், சென்னை பல்கலைக்கழகம், சென்னை.
2. மணவை முஸ்தபா, நொண்டி நாடகம், தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள், மீரா பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1986